10th November 1961]

SRI M. K. SOMASUNDARAM : ஒவ்வொரு சென்டர்களிலும் எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதைச் சொல்ல முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தூத்துக்குடியில் ஒவ்வொரு தடவைக்கும் 20 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், இவ்விதம் 10 தடவை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். நாகப்பட்டிணத்தில் 140 பேர்கள் இதுவரையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கு முன்பு 10 பேர்கள் என்று தேர்ந்தெடுத்தது, இப்போது 20 பேர்கள் விதம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சென்னையில் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

Municipal Chairman, Madurai (Complaints)

* 1969 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை முனிசிபல் சேர்மன்மீது இதுவரை எத்தனை புகார்கள் வந்தன? புகார்கள் எது பற்றியது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : A complaint has been received from the Vice-Chairman and some members of the Madurai Municipal Council in regard to the irregular casting of votes by the Chairman in respect of a resolution regarding the running of the municipal sewage farm departmentally. No other complaint has been received.

Handloom Export Promotion Council

* 1970 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார் கைத்தறித் துணி ஏற்றுமதி அபிவிருத்திக் கவுன்சில் ஏற்படுத்துவதைக் குறித்து மாநில சர்க்காரை கேட்டார்களா ?

(இ) அப்படியாயின், மாநில சர்க்காரின் முடிவென்ன ?

(உ) அபிவிருத்திக் கவுன்சிலின் வேலை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) No, Sir.

(இ) & (உ) Do not arise.

Baby taxis (Madras City)

* 1971 *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI A. A. RASHEED :
SRI T. T. DANIEL :
} Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of baby taxis permitted to ply in Madras City as on 1st July 1961; and

(*b*) whether there is any proposal to (i) increase the number of taxis, (ii) the number of passengers in a taxi and (iii) the fare?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 1,186.

(*b*) (*i*) The Regional Transport Authority, Madras, has no specific proposals on hand at present to increase the number of taxis. However, permits are sanctioned liberally to applicants for taxis every month. The grant of permits is in no way limited and all applicants satisfying the requirements to run a taxi efficiently are invariably granted permits;

(ii) Under the existing orders which are permissive in nature, all contract carriages intended to carry three passengers besides the driver shall be permitted to carry four passengers besides the driver without any increase in the tax payable under the Madras Motor Vehicles Taxation Act, 1931.

(iii) The matter is under consideration.

SRI T. T. DANIEL : Sir, in view of the fact that public do really feel some inconveniences and difficulties especially when they travel with their families in the baby taxis, will the Government consider to exclude the children from the number that is permitted at present?

THE HON. SRI V. RAMAIAH : Sir, we have just increased the number of passengers to be carried by taxis and I do not think after this increase there would be any difficulty.

SRI A. A. RASHEED : May I know, Sir, the reason why baby taxi drivers even now are not allowing more than three persons to carry?

THE HON. SRI V. RAMAIAH : When we increased the seating capacity of the baby taxis, the matter went up to the High Court, there was some complication. But now the taxi owners have agreed to have more than three passengers.

9-00 p.m. SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சிறிய வாடகைக் கார்களில் மூன்று பேர்களும் ஒரு குழந்தையையும் அனுமதிக்கலாம் என்று உத்திரவிட்டிருப்பதைப் போன்று பெரிய வாடகைக் கார்களில் குறைந்தது ஐந்து பேர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறதா ? அனுமதிக்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதைப்பற்றித் தெளிவாக்கி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : பெரிய டாக்ஸி கார்களில் ஐந்து பேர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

SRI R. SRINIVASA IYER : இப்போது பேபி டாக்ஸியில் மூன்று பேர்களுக்கு மேல் நான்கு பேர்கள் வரை வரி ஜாஸ்தி இல்லாமல் ஏற்றிச் செல்ல உத்தரவு போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நேற்றுகூட ஒரு டாக்ஸியில் நான்கு பேர்கள்

10th November 1961]

போக வேண்டுமென்று சொன்ன சமயத்தில் மூன்று பேர்களுக்கு மேல் 4-வது பேரை ஏற்றிச்செல்லுவதென்றால் ஸீட்டுக்கு 42 ரூபாய் எக்ஸ்ட்ரா கட்டினால்தான் ஏற்றிக்கொண்டு போகலாம் என்று இருக்கிறது என்று சொன்னார்கள். அதிக வரி இல்லாமல் எடுத்துச் செல்ல பர்மிஷன் கிடையாது, ஆதலால் 4 பேர்களை ஏற்றிச் செல்ல முடியாது என்று சொல்லுகிறார்களே, மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸேஷன் இல்லாது வேறு ஏதாவது வரி செலுத்த வேண்டியிருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது எந்த வரி அதிகமாகச் செலுத்த வேண்டுமென்று பதில் சொன்னேன். மற்ற விவரம் ஏதாவது வேண்டுமானால் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI K. VINAYAKAM : Even though there is a Government Order to the effect that if the driver of a baby taxi is willing, he can carry four passengers, as it is, no baby taxi-driver is coming forward to take four passengers and the Government Order is not respected. The drivers flatly refuse to carry more than three passengers in spite of our pointing out to them the existence of that Government Order. Will the Government take steps to enforce that Government Order properly?

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member is well aware that when the Government passed that order enabling the baby-taxi owners to take more than three passengers, the matter was taken before the High Court and there was some complication. The High Court, in their judgment, have stated that we cannot compel them to carry four passengers and without compelling the baby-taxi owners to carry four passengers, they could be allowed to carry four passengers. After that judgment, the later Government Order was passed and as I have just now read, it is permissive in nature. Under that order, all baby-taxi owners are permitted to carry four passengers besides the driver. Many of the taxi-owners who met me have informed me that they were agreeable to the increase in the number of passengers.

SRI K. B. S. MANI : சார், பேபி டாக்ஸியில் அதிகமாக ஏற்றிக் கொண்டு போகிற முறையில் குழந்தை ஒன்று என்று குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள். சாதாரணமாக 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை வீட்டில் விட்டுவிட்டு வெளியே செல்ல முடியாது— கூட அழைத்துக்கொண்டு தான் செல்லவேண்டும். ஆகையால், குழந்தை என்றால் 2 அல்லது 3 என்றாலும் பரவாயில்லை என்ற முறையில் அனுமதிக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இரண்டு அல்லது மூன்று குழந்தைகளை அழைத்துக்கொண்டு போக வேண்டுமென்றால் பெரிய டாக்ஸியில் போகலாம்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சிறிய வாடகைக் காரில் 4 பேர்கள் செல்ல வேண்டுமானால் தனியாக வரி ஏதாவது டாக்ஸி உரிமையாளர்கள் கட்ட வேண்டியிருக்கிறதா ?

[10th November 1961

இப்போது வாடகைக் காரில் 4 பேர்கள் போகும்போது போலீ ஸார் 4-வது ஆளை ஏற்றியதற்காக குற்றச்சாட்டு செய்துகொண் டிருக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : போலீஸார் தடை செய்து குற்றச்சாட்டு அவர்கள்மீது சுமத்தப்பட்டதாக அந்தவிதமான தகவல் என்னிடத்தில் வரவில்லை. வேறு என்ன வரி கட்ட வேண்டு மென்று தனியாகக் கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : இப்போது கவர்ன்மெண்ட் டிரான்ஸ்போர்ட் சார்பில் பஸ் மாத்திரம்தான் போகிறது. அதே போன்று டாக்ஸிகளை ஓட்டும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : கிடையாது.

SRI A. GOVINDASAMY : நம்முடைய ராஜ்யத்தில் மூன்று பேர்கள் ஏறக்கூடிய பேபி டாக்ஸி போன்ற கார்களில் மற்ற ராஜ் யங்களில் 4 பேர்கள் அனுமதிக்கப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படியானால் நம் ராஜ்யத்திலும் அந்தமாதிரி அனுமதிக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : மற்ற ராஜ்யங்களில் இப்போது இருக்கக்கூடிய நிலை எனக்குத் தெரியாது. நமது ராஜ்யத்தில் 4 பேர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

SRI J. MATHA GOWDER : ஸார், 3 பேர்களுக்கு மேல் பேபி டாக்ஸியிலே ஏற்ற வேண்டுமென்று நாம் அவர்களை வற்புறுத்த முடியாது என்று ஹைக்கோர்ட்டின் ஜட்ஜ்மென்ட் வந்ததின் நோக்கம் என்ன ? எந்தச் சட்டத்தை வைத்து அம் மாதிரி சொன்னார்கள் ? அப்படி ஏதாவது ஒரு சட்டத்தில் குழப்பம் இருக்கும் பட்சத்தில் கட்டாயப்படுத்தும் அளவுக்கு அதைத் திருத்தக் கூடாதா ? பஸ்களில் 30 பேர்களை கட்டாயம் ஏற்றிச் செல்ல வேண்டுமென்று நாம் கட்டாயப்படுத்தும் நேரத்தில் பேபி டாக்ஸியில் 4 பேர்களை ஏற்றிச்செல்ல வேண்டுமென்று கட்டாயப் படுத்துவதில் என்ன சங்கடம் இருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : இதைப்பற்றி கனம் அங்கத் தினர் தனியாகக் கேள்வி போட்டால் இருக்கக்கூடிய சிக்கல்களை எடுத்துச் சொல்ல முடியும்.

Minerals (Kallakurichi)

* 1972 *Q.*—SRI N. K. PALANISAMI : } SRI S. M. ANNAMALAI : } Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether copper, lead and zinc are available near Kallakurichi in South Arcot district;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether steps have been taken to exploit the same?